## ஜும்ஆ குத்பா பேருரை

# தலைப்பு : வீண்விரயம் செய்யாதீர்கள்

**தேதி : ஹிஜ்ரி 1448 ஸஃபர் மாதம் 3, ஆங்கில தேதி 17 / 07 / 2026 கி.பி.**

அனைத்துப் புகழும் அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியது, அவன் நீதியை பேணுமாறு கட்டளையிட்டுள்ளான், மேலும் நீதியை நிலை நாட்டுபவர்களை புகழ்ந்துரைத்துள்ளான். இன்னும் அவன் வீண் விரயம் செய்வதை தடை செய்துள்ளான். தடுத்தான், மேலும் வீண் விரயம் செய்வோரை இகழ்ந்துரைத்துள்ளான், அத்தோடு அவர்களை ஷைத்தான்களின் சகோதரர்களாக ஆக்கியுள்ளான். மேலும், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை; அவன் தனித்தவன், அவனுக்கு இணையாருமில்லை என்று நான் சாட்சி பகர்கிறேன், அவன் தனது வேதத்தில் தெளிவாக இவ்வாறு கூறுகிறான்:

وَلَا تُسْرِفُوا إِنَّهُ لَا يُحِبُّ الْمُسْرِفِينَ } [الأعراف: 31]

"மேலும், நீங்கள் வீண் விரயம் செய்யாதீர்கள்; நிச்சயமாக அவன் வீண் விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை." (அல்-அஃராஃப் 7 : 31) மேலும், நிச்சயமாக நமது நபியாகிய முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவனது அடியாரும், நம்பிக்கைக்குரிய தூதரும் ஆவார்கள் என்றும் சாட்சி பகர்கிறேன்,இன்னும் அவர்கள் நபிமார்கள் மற்றும் தூதர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவர்,அல்லாஹ் அவரது மீதும், அவரது தூய்மையான குடும்பத்தினர் மீதும், அவரது பாக்கியமிக்க தோழர்கள் மீதும் அருள்புரிவானாக. மேலும், இறுதி நாள் வரை அவர்களை நன்முறையில் பின்பற்றுபவர்கள் மீதும் ஏராளமான ஸலாமையும் அருள்புரிவானாக.

### இறைதுதிக்குப் பின்னே :

**அல்லாஹ்வின் அடியார்களே!** உங்களுக்கும், எனக்கும் அல்லாஹ்வின் இறையச்சத்தைக் (தக்வாவை) கொண்டு உபதேசம் செய்கிறேன். ஏனெனில், நிச்சயமாகப் இறையச்சம் என்பது வெற்றியின் பாதையாகும், மேலும் நன்மை, சீர்திருத்தத்திற்கான வழியுமாகும். உயர்ந்தோனாகிய அல்லாஹ் கூறுகிறான் :

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَلْتَنْظُرْ نَفْسٌ مَا قَدَّمَتْ لِغَدٍ وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللَّهَ خَبِيرٌ بِمَا تَعْمَلُونَ} [الحشر: 18]

"நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; மேலும் ஒவ்வொரு ஆத்மாவும் நாளைக்காக (மறுமைக்காக) தான் என்ன தயாரித்து அனுப்பியிருக்கிறது என்பதைப் பார்த்துக் கொள்ளட்டும். இன்னும் நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு அறிந்தவன்." (அல்-ஹஷ்ர் 59 : 18)

**முஸ்லிம்களின் சமூகமே! :**

திண்ணமாக, உங்களது மகத்தான மார்க்கம் அதன் நேரான, நடுநிலையான வழிமுறையைக் கொண்டு தனித்து விளங்குகிறது, அது வெறுக்கத்தக்க வீண் விரயத்தின் பாதைக்கும், அழிவை ஏற்படுத்தும் கஞ்சத்தனத்தின் வழிக்கும் இடைப்பட்ட (நடுநிலையாகும்),எனவே, அது ஒவ்வொரு விஷயத்திலும் நடுநிலையைக் கடைப்பிடிக்குமாறு அழைப்பு விடுக்கின்றது, மேலும் ஒவ்வொரு காரியத்திலும் மிதமான போக்கைக் கையாளுமாறு தூண்டுகின்றது, அதில் வரம்பு மீறுதலும் இல்லை, அலட்சியமும் இல்லை. அல்லாஹ் கூறுகிறான்:

وَلَا تَجْعَلْ يَدَكَ مَغْلُولَةً إِلَى عُنُقِكَ وَلَا تَبْسُطْهَا كُلَّ الْبَسْطِ فَتَقْعُدَ مَلُومًا مَحْسُورًا} [الإسراء: ٢٩]

"மேலும், உமது கையை உமது கழுத்தில் கட்டப்பட்டதாக (கஞ்சனாக) ஆக்கிக் கொள்ளாதீர்; இன்னும் அதனை முற்றிலும் விரித்துவிடவும் (அளவுக்கு அதிகமாகச் செலவு செய்யவும்) வேண்டாம்; அதனால் நீர் நிந்திக்கப்பட்டவராகவும், கவலையடைந்தவராகவும் அமர வேண்டியதாயிருக்கும்." (அல்-இஸ்ரா 17 : 29)

மேலும் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

كُلُوا، وَاشْرَبُوا، وَتَصَدَّقُوا، وَالْبَسُوا، مَا لَمْ يُخَالِطْهُ إِسْرَافٌ أَوْ مَخِيلَةٌ« [أَخْرَجَهُ ابْنُ مَاجَهْ، وَحَسَّنَهُ الْأَلْبَانِيُّ

"நீங்கள் உண்ணுங்கள், பருகுங்கள், தர்மம் செய்யுங்கள், மேலும் ஆடை அணியுங்கள்; வீண் விரயமோ அல்லது பெருமையோ அதில் கலவாத வகையில்." (இப்னு மாஜாஹ், அல்-அல்பானி இதனை ஹஸன் என வகைப்படுத்தியுள்ளார்).

இப்னுல் கையிம் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் வீண் விரயத்தின் வரம்பு குறித்துக் கூறினார்கள்: ("இவை அனைத்தின் அளவுகோலும் நீதியுமாகும்; அது வரம்பு மீறுவதற்கும் அலட்சியம் செய்வதற்கும் இடைப்பட்ட நடுநிலையான வழியைத் தேர்ந்தெடுப்பதாகும். இதன் மீதே இம்மை மற்றும் மறுமையின் நன்மைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன"). ஏனெனில், வீண் விரயம் என்பது சமுதாயங்களை அச்சுறுத்தும் ஒரு நோயாகும், மேலும் செல்வங்களையும் வளங்களையும் அது அழிக்கக்கூடியது, அத்தோடு அது சோதனைகளையும் தண்டனைகளையும் கொண்டுவரும், மேலும் அது வழிகேட்டின் கிளைகளில் ஒரு கிளையாகும்,மேலும் அதனைச் செய்பவர்களுக்கு மாபெரும் உன்னதமான இறைவனின் கோபத்தைக் கொண்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது; உயர்ந்தோனாகிய அல்லாஹ் கூறுகிறான்: وَأَنَّ الْمُسْرِفِينَ هُمْ أَصْحَابُ النَّارِ} [غافر: 43] "மேலும், நிச்சயமாக வரம்பு மீறுபவர்கள் (வீண் விரயம் செய்பவர்கள்) நரகவாசிகளாவர்." (காஃபிர் 40 : 43)

**அல்லாஹ்வின் அடியார்களே!**

நிச்சயமாக நமது அன்றாட வாழ்க்கையில் வீண் விரயத்திற்கும் அழிவிற்கும் பல்வேறு வடிவங்கள் உள்ளன, அறிவுடையோரும் விவேகமுடையோரும் மறுக்கின்ற பல அம்சங்களும் (அதில்) உள்ளன.

**இவ்விஷயத்தில் மிகவும் வெளிப்படையான அடையாளம்:** குறிப்பாக விருந்துகளிலும் விழாக்களிலும்,உண்ணுவதிலும், பருகுவதிலும் வீண் விரயம் செய்வதாகும்; உணவும் பானமும் உடலுக்குத் தேவையான சத்துக்கள்தான்,இருப்பினும், அது தேவையின் எல்லையைக் கடந்துவிட்டால், அது நோய்களுக்கும் பிணிகளுக்கும் காரணமாக மாறிவிடும், அதனைச் செய்பவர் சோம்பல், அஜீரணம் மற்றும் பல நோய்களால் பாதிக்கப்படுவார்;

மிக்தாம் பின் மஃதி கரீப் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன்:

مَا مَلَأَ آدَمِيٌّ وِعَاءً شَرًّا مِنْ بَطْنٍ، بِحَسْبِ ابْنِ آدَمَ أُكُلَاتٌ يُقِمْنَ صُلْبَهُ، فَإِنْ كَانَ لَا مَحَالَةَ، فَثُلُثٌ لِطَعَامِهِ، وَثُلُثٌ لِشَرَابِهِ، وَثُلُثٌ لِنَفَسِهِ».
[أَخْرَجَهُ التِّرْمِذِيُّ، وَصَحَّحَهُ الْأَلْبَانِيُّ]

"ஆதமுடைய மகன் தனது வயிற்றை விட மோசமான எந்த ஒரு பாத்திரத்தையும் நிரப்பவில்லை. ஆதமுடைய மகனுக்கு அவனது முதுகை நிமிர்த்தி வைக்கும் அளவிலான சில கவளங்கள் போதுமானதாகும். அவ்வாறு அவன் நிரப்பியே தீர வேண்டும் என்றால், அவனது உணவிற்காக ஒரு பகுதியும் (மூன்றில் ஒன்று), அவனது குடிப்பிற்காக ஒரு பகுதியும், அவனது மூச்சு விடுவதற்காக ஒரு பகுதியும் இருக்கட்டும்." (திர்மிதி, அல்-அல்பானி இதனை சஹீஹ் என வகைப்படுத்தியுள்ளார்).

**இஸ்லாமியச் சகோதரர்களே!**

**வீண் விரயத்தின் மற்றுமொரு அடையாளம்:** ஆடை அலமாரிகளில் அதிக விலையுயர்ந்த, ஆடம்பரமான ஆடைகளைக் குவித்து வைப்பதாகும்; வெளிப்பகட்டு மற்றும் போலித்தனத்தைப் பின்பற்றுவதற்காகவும், எவ்விதத் தேவையும் இல்லாதபோதும் வாங்கும் ஆசைக்கு அடிபணிவதனாலும் (இவ்வாறு செய்கின்றனர்),இந்த வீண் விரயமானது மக்களின் விருந்துகளிலும், பெண்களின் கூட்டங்களிலும், திருமண விழாக்களிலும் மிகவும் தெளிவாகத் தெரிகிறது, அளவுகடந்த செலவுகள், ஆடம்பரமான ஆடைகள், சிலவேளை அவை ஒரே ஒரு முறை மட்டுமே அணியப்படலாம், எல்லையற்ற வீண் விரயம், எவ்வித அடிப்படையுமற்ற நிபந்தனைகள், மற்றும் அல்லாஹ் எந்தவொரு ஆதாரமும் இறக்காத நிலையில் வீண் பெருமையடித்தல் ஆகியவையேயாகும்.

**மேலும், வீண் விரயத்தின் மற்றுமொரு அடையாளம்:** எவ்விதப் பயனும் தராத விஷயங்களில் பணத்தை வீணடிப்பதில் மூழ்கியிருப்பதாகும்,அற்பமான

மற்றும் ஆடம்பரப் பொருட்களிலிருந்து தொடங்கி, அழிவை ஏற்படுத்தும் தடுக்கப்பட்ட ஹராமான காரியங்கள் வரை அது நீள்கிறது,

இமாம் மாலிக் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் வீண் விரயம் குறித்துக் கூறினார்கள்: "செல்வத்தை அதன் தகுதியான இடத்திலிருந்து எடுத்து, அதற்குத் தகுதியில்லாத இடத்தில் வைப்பதாகும்" எனவே, எப்போது ஒரு முஸ்லிம் தறிகெட்டு வாங்கும் ஆசை மிகைத்து, அதன் காரணமாகத் தனது மனஇச்சையைக் கட்டுப்படுத்தும் திறனை அவன் இழக்கிறானோ, அது அவனையும் அவனது குடும்பத்தினரையும் நெருக்கடியிலும் சிரமத்திலும் வீழ்த்திவிடுகிறது, மேலும் சிலவேளை அவனது நிம்மதியான வாழ்வைக் குலைக்கும் அளவுக்குக் கடன்கள் அவன் மீது சுமையாகிவிடும்; அத்தோடு அந்தக் கடனை அடைப்பதற்கும் அதிலிருந்து விடுபடுவதற்கும் உண்டான கவலையிலேயே அவன் சிறைப்பட்டவனைப் போல வாழ நேரிடும்.

**இறை நம்பிக்கையாளர்களான சகோதரர்களே!**

**மேலும் வீண் விரயம் மற்றும் வீண் செலவுகளின் அடையாளங்களில் உள்ளதாகும் :** நீர், மின்சாரம் மற்றும் நவீனத் தகவல் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்துவதில் நியாயமான எல்லையைக் கடந்து செல்வதாகும், ஏனெனில் அவற்றைப் பயன்படுத்துவதில் உள்ள வீண் விரயம் என்பது பார்க்கக்கூடியதாகவும் கவனிக்கத்தக்கதாகவும் உள்ளது; வீடுகளிலும், பொதுப் பயன்பாட்டு இடங்களிலும், மற்றும் நிறுவனங்களிலும், வாகனங்களைக் கழுவுவதில் எல்லை மீறுவதும், தோட்டங்கள் மற்றும் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதில் மிதமற்ற தன்மையைக் கையாளுவதும், மேலும் குழாய்களின் நீர் இணைப்புகளை (பழுது பார்க்காமல்) அலட்சியப்படுத்துவதும், இந்தப் பிரச்சனையைப் பற்றிய புரிதல் மிகவும் பலவீனமாக இருப்பதை அறிவிக்கிறது, பகலில் விளக்குகளை எரிய விடுவதும், மின் சாதனங்களைத் தவறான முறையில் பயன்படுத்துவதும், ஒருவேளை அவர்கள் தங்களது நடத்தைகளைச் சீரமைத்து, தங்களின் தேவைகளை அளவோடு கையாண்டிருந்தால், ஒரு கடுமையான சிரமத்திலும் நெருக்கடியிலும் சமுதாயத்தைக் கொண்டு போய் தள்ளிவிடாமல் தவிர்த்திருக்கக்கூடும்.

**அல்லாஹ்வின் அடியார்களே!**

இவ்விஷயத்தில் நபியவர்களின் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) வழிகாட்டுதலை நீங்கள் சிந்திக்க வேண்டும், திண்ணமாக, மதீனா நகரம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது காலத்தில் தாராளமான நீர்வளமும், பயிர்களும், தோட்டங்களும் கொண்டதாகவே இருந்தது, இவ்வளவு இருந்தும் கூட, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு ஸாஃ அளவு நீரைக் கொண்டு குளிப்பவர்களாகவும், ஒரு முத் அளவு நீரைக் கொண்டு

உளூச் செய்பவர்களாகவும் இருந்தார்கள், **(குறிப்பு: 1 முத் என்பது சுமார் 600 மில்லி லிட்டர், 1 ஸாஃ என்பது சுமார் 2.5 லிட்டர் ஆகும்)**

அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள்: கிராமத்து அரபி ஒருவர் வந்து அல்லாஹ்வின் தூதரிடம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) உளூச் செய்வதைப் பற்றிக் கேட்டார், அப்போது அவர்கள் அவருக்கு (உறுப்புகளை) மும்மூன்று முறை கழுவிக் காட்டினார்கள், பிறகு கூறினார்கள்: "இதுவே உளூவாகும், எனவே யார் இதற்கு மேல் அதிகமாக்குகிறாரோ, அவர் நிச்சயமாக வரம்பு மீறிவிட்டார், அல்லது எல்லையைக் கடந்துவிட்டார், அல்லது அநீதி இழைத்துவிட்டார்." (இப்னு மாஜாஹ், அல்-அல்பானி இதனை ஹஸன் என வகைப்படுத்தியுள்ளார்).

இந்த நபிமொழியின் வழிகாட்டுதலே வணக்க வழிபாடுகளில் ஒன்றான உளூவின் விஷயத்தில் இப்படி என்றால், வணக்கம் அல்லாத மற்ற அன்றாட விஷயங்களில் எப்படி இருக்க வேண்டும் என்பதை நமக்கு உணர்த்தவில்லையா?!

**இஸ்லாமியச் சகோதரர்களே!**

நிச்சயமாக, நீரையும் மின்சாரத்தையும் சிக்கனமாகப் பயன்படுத்துவது என்பது ஒரு மார்க்கக் கடமையும் ஒழுக்கப் பொறுப்புமாகும், ஏனெனில், நீர் என்பது இறைவனின் அருட்கொடையாகும், அதிலிருந்தே நாம் பருகுகிறோம், அதைக் கொண்டே நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்கிறோம், மேலும் அதைக் கொண்டே பயிர்களுக்கும் கால்நடைகளுக்கும் நீர் புகட்டுகிறோம்,

وَالنَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ نَهَى عَنِ الْإِسْرَافِ فِيهِ، حَتَّى لَوْ كَانَ الْمَرْءُ عَلَى نَهْرٍ جَارٍ،

நிச்சயமாக நபியவர்கள் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஓடிக்கொண்டிருக்கும் நதியின் ஓரத்தில் ஒரு மனிதன் இருந்தாலும் கூட, அதில் வீண் விரயம் செய்வதைத் தடுத்துள்ளார்கள்,

எனவே, தேவை இல்லாதபோது தண்ணீர்க் குழாய்களை மூடிவிடுங்கள், மேலும் நீர் கசிவுகளைப் பழுதுபாருங்கள், இன்னும் உளூச் செய்வதிலோ அல்லது குளிப்பதிலோ வீண் விரயம் செய்யாதீர்கள்.

இதேபோல மின்சாரமும் நமது வாழ்க்கையை ஒளிரச் செய்த ஒரு பேரருளாகும், ஆகவே, விளக்குகளையும் மின் சாதனங்களையும் பயன்படுத்தாமல் விட்டுச் செல்லும்போது அவற்றை அணைப்பதில் ஆர்வமாக இருங்கள்,மின்சாரத்தை மிச்சப்படுத்தும் விளக்குகளைப் பயன்படுத்துங்கள், மேலும் குளிர்சாதனப் பெட்டிகள்/ஏசிகளில் அளவுக்கு அதிகமான குளிர்விப்பைத் தவிருங்கள், ஏனெனில் அவ்வாறு செய்வதில் பணத்தைப் பாதுகாப்பதும், குடும்ப பட்ஜெட்டிற்கு நிம்மதியும், நாட்டின் மீதான பொருளாதாரச் சுமைகளைக் குறைப்பதும் அடங்கியுள்ளது, அத்தோடு அந்த அருட்கொடை நம்மீது தொடர்ந்து

நீடித்திருக்கச் செய்வதற்கும் இதுவே வழியாகும்; மாண்புமிக்க அல்லாஹ் கூறுகிறான்:

وَالَّذِينَ إِذَا أَنْفَقُوا لَمْ يُسْرِفُوا وَلَمْ يَقْتُرُوا وَكَانَ بَيْنَ ذَلِكَ قَوَامًا } [الفرقان: 67]

"மேலும் அவர்கள் எத்தகையோரென்றால், செலவு செய்யும்போது வீண் விரயம் செய்யமாட்டார்கள், கஞ்சத்தனமும் செய்யமாட்டார்கள்; மாறாக அதற்கு இடைப்பட்டதாகவே (அவர்களது செலவு) நடுநிலையாக இருக்கும்." (அல்-ஃபுர்கான் 25 : 67)

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் இந்த மகத்தான குர்ஆனில் பரக்கத் செய்வானாக,மேலும் அதிலுள்ள வசனங்கள் மற்றும் ஞானமிக்க உபதேசங்களைக் கொண்டு எனக்கும் உங்களுக்கும் பயனளிக்கச் செய்வானாக, எனது இந்த வார்த்தையை நான் கூறி, எனக்கும் உங்களுக்கும் உள்ள அனைத்துப் பாவங்களுக்காகவும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன், மேலும் அவனிடமே மீளுகிறேன், எனவே அவனிடம் நீங்கள் பாவமன்னிப்புக் கேளுங்கள், அவனிடமே மீளுங்கள்; நிச்சயமாக அவன் மாபெரும் மன்னிப்பாளனாகவும், பெருங்கருணையாளனாகவும் இருக்கின்றான்.

## இரண்டாவது உரை

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது, மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று நான் சாட்சி பகர்கிறேன்,மேலும் நமது நபியாகிய முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவனது அடியாரும், அவனது தூதரும், அவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவரும் ஆவர் என்றும் சாட்சி பகர்கிறேன்,அல்லாஹ் அவரது மீதும், அவரது குடும்பத்தினர், அவரது தோழர்கள் மற்றும் அவரை நேசித்தவர்கள் அனைவர் மீதும் அருளும் சாந்தியும் பொழிவானாக.

**இறைதுதிக்குப் பின் :**

**ஈமானியச் சகோதரர்களே!** நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; மேலும் நன்மையையும் உபகாரத்தையும் செய்பவர்களில் ஒருவராக ஆகிவிடுங்கள், இன்னும் வீண் விரயம் மற்றும் வரம்பு மீறுதலின் பாதையைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்; ஏனெனில் நிச்சயமாக அதன் முடிவு ஏமாற்றமும் நஷ்டமுமே ஆகும்; அல்லாஹ் கூறுகிறான்: {يَا عِبَادِ فَاتَّقُونِ} [الزمر: 16] "என் அடியார்களே! எனவே, நீங்கள் எனக்கே அஞ்சுங்கள்." (அஸ்-ஸுமர் 39 : 16)

**அல்லாஹ்வின் அடியார்களே!**

உண்மையாளர்களான மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டு, செழிப்பாகத் திகழ்ந்த எத்தனையோ சமுதாயங்களைப் பற்றி வரலாறு நமக்குக் கூறவில்லையா? அவர்கள் அச்சமுதாயங்களைத் தகுதியான உள்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டியெழுப்பினார்கள்,

மேலும் அவற்றை நிலைநிறுத்துவதற்காகத் தோட்டங்கள், தொழிற்சாலைகள், அசையாச் சொத்துக்கள் மற்றும் வணிகத்தலங்களை அவற்றைச் சுற்றி உருவாக்கினார்கள், பின்னர், அச்சமுதாயங்கள் வீண் விரயமும் சொகுசு வாழ்க்கையும் மிகைத்துப்போன ஒரு பின்தோன்றல் தலைமுறையிடம் போய் சேர்ந்தன, அவர்கள் தங்களது மனஇச்சைகளின் கடிவாளத்தை அவிழ்த்து விட்டனர்; இறுதியில் தங்களுக்கு முந்தையோர் மரபுரிமையாக விட்டுச் சென்ற அனைத்தையும் பாழடித்தனர், அதனால் அந்தச் சமுதாயங்கள் அழிந்துபோயின, இன்னும் அவர்களின் பிள்ளைகள் கடுமையான வறுமையையும் சிதறுண்டு போகும் துன்பத்தையும் சந்தித்தனர்.

உதாரணமாக, இஸ்பானியாவின் செவில்லியா நகரின் மன்னரான முஃதமீத் பின் அத்தாத் என்பவர் எல்லையற்ற ஆடம்பர வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்,அவர் இன்பங்களை அனுபவிப்பதிலும் சுகபோகங்களிலும் மூழ்கி, இறுதியில் பெருமையிலும் வீண் விரயத்திலும் வீழ்ந்தார், ஒருமுறை அவருடைய மனைவி, தனது அரண்மனையைச் சுற்றி ஏழைப் பெண்கள் சிலர் தண்ணீரை விற்றுக்கொண்டும், சேற்றில் நடந்து விளையாடிக்கொண்டும் இருப்பதைக் கண்டார், அப்போது அவரது மனைவியும் அவரது மகள்களும் தாங்களும் அவர்களைப் போலவே சேற்றில் இறங்கி விளையாட வேண்டும் என்று ஆசைப்பட்டனர்,எனவே, முஃதமீத்தும் அவர்களது ஆசையை மிகவும் விசித்திரமான முறையில் நிறைவேற்றினார்,

அவர் அம்பர், கஸ்தூரி (மிஸ்க்) மற்றும் கற்பூரம் (காஃபூர்) ஆகியவற்றை கொண்டுவருமாறு உத்தரவிட்டு, அவற்றை பன்னீருடன் கலக்கச் செய்தார்,மேலும் அது பார்ப்பதற்குச் சேற்றைப் போன்ற தோற்றத்தைத் தருவதற்காக அதனுடன் குங்குமப்பூவைச் (ஸஃப்ரான்) சேர்க்கச் செய்தார்; பின்னர் அவரது மனைவியும் மகள்களும் அதில் இறங்கி விளையாடுவதற்காக, அந்த வாசனைச் சேற்றை அரண்மனை முற்றத்தில் பரப்பச் செய்தார். வரலாறு பதிவு செய்து வைத்துள்ள அளவுகடந்த ஆடம்பரத்திற்கும் வீண் விரயத்திற்கும் இதுவொரு உதாரணமாகும்; சொகுசான மற்றும் விசாலமான வாழ்வாதாரத்தை வழங்கப்பட்டவர்கள் இதிலிருந்து பாடம் பெற வேண்டும் என்பதற்காக வரலாறு இதனைப் பதிவு செய்துள்ளது.

அதன் பின்னர், முஃதமீதின் ஆட்சி வீழ்ந்தது, அவர் செவில்லியா நகரிலிருந்து வெளியேற்றப்பட்டார், இன்னும் மொராக்கோ நாட்டின் 'அக்மாத்' (Aghmat) நகரில் அவர் சிறைபிடிக்கப்பட்டு, அவரது செல்வங்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன,பின்னர் ஒரு பெருநாள் தினத்தில், அவரது மகள்கள் கிழிந்த, பழமையான ஆடைகளை அணிந்து அவரிடம் வந்தனர்,அப்போது தனது நிலைமையையும், தனது குடும்பத்தினர் மற்றும் மகள்களின் அவல நிலையையும் கண்டு அவரது உள்ளம் குமுறியது; எனவே அவர் தனது நிலையை நொந்து பின்வரும் கவிதையைத் தனக்குத்தானே பாடினார்:

فِيمَا مَضَى كُنْتَ بِالْأَعْيَادِ مَسْرُورًا

கடந்த காலங்களில் நீ பெருநாட்களில் மகிழ்ச்சியாக இருந்தாய்,

فَسَاءَكَ الْعِيدُ فِي أَغْمَاتَ مَأْسُورًا

ஆனால் இன்று அக்மாத் நகரில் சிறைப்பட்டிருக்கும் நிலையில் இந்தப் பெருநாள் உன்னைத் துயரத்தில் ஆழ்த்திவிட்டது.

تَرَى بَنَاتِكَ فِي الْأَطْمَارِ جَائِعَةً

உனது மகள்கள் கிழிந்த ஆடைகளை அணிந்து பசியோடு இருப்பதைக் காண்கிறாய்,

يَغْزِلْنَ لِلنَّاسِ مَا يَمْلِكْنَ قِطْمِيرًا

அவர்கள் ஒரு அற்பப் பொருளையும் (கித்மீர் அளவு கூட) சொந்தமாகக் கொண்டிராமல், மக்களுக்காக நூல் நூற்றுப் பிழைக்கிறார்கள்.

يَطَأْنَ فِي الطِّينِ وَالْأَقْدَامُ حَافِيَةٌ

அவர்கள் வெறுங்கால்களுடன் உண்மையான சேற்றில் நடக்கிறார்கள்,

كَأَنَّهَا لَمْ تَطَأْ مِسْكًا وَكَافُورًا

அவர்களின் கால்கள் அன்று கஸ்தூரியிலும் கற்பூரத்திலும் (வாசனைச் சேற்றில்) நடக்கவே இல்லை என்பது போல இன்று மாறிவிட்டது.

مَنْ بَاتَ بَعْدَكَ فِي مُلْكٍ يُسَرُّ بِهِ

உனக்கு பின்னே எவரேனும் தனது ஆட்சியை எண்ணி மகிழ்ச்சியில் களித்திருந்தால்,

فَإِنَّمَا بَاتَ بِالْأَحْلَامِ مَغْرُورًا

நிச்சயமாக அவர் வெற்றுப் பகற்கனவுகளைக் கொண்டு ஏமாந்து கிடக்கிறார்.

யா அல்லாஹ்! எங்களை வீண் விரயத்திலிருந்தும், ஆடம்பர வீண் செலவுகளிருந்தும் பாதுகாப்பாயாக, எங்களது உடல் உறுப்புகளையும், எங்களது செல்வங்களையும் தவறுகளிலிருந்தும் குறைபாடுகளிலிருந்தும் காத்தருள்வாயாக, எங்கள் மீது உனது அருட்கொடைகளைத் தொடர்ந்து நீடிக்கச் செய்வாயாக, மேலும் உனது கோபத்திலிருந்தும் தண்டனையிலிருந்தும் எங்களைக் காப்பாற்றுவாயாக, அகிலங்களின் இறைவனே! யா அல்லாஹ்! முஸ்லிம்களான ஆண்களையும் பெண்களையும், அவர்களில் உயிருடன் இருப்பவர்களையும் மரணித்தவர்களையும் மன்னிப்பாயாக, எங்கள் இறைவனே! எங்களை விட்டும் சோதனைகளையும், கொள்ளை நோய்களையும், இன்னல்களையும், வறுமைகளையும் நீக்கியருள்வாயாக, எங்கள் மீது உனது அருட்கொடைகளைத் தொடரச் செய்வாயாக, எங்களை விட்டும் உனது தண்டனைகளைத் தடுத்தருள்வாயாக, எங்களது உள்ளங்களைத்

தூய்மைப்படுத்துவாயாக; உள்ளங்களைத் தூய்மைப்படுத்துபவர்களில் நீயே மிகச் சிறந்தவன்,எங்கள் இறைவனே! எங்களுக்கு இம்மையிலும் நன்மையை வழங்குவாயாக, மறுமையிலும் நன்மையை வழங்குவாயாக, மேலும் நரக நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக் காத்தருள்வாயாக.

யா அல்லாஹ்! எங்களது அமீருக்கும் (நாட்டின் தலைவருக்கும்) அவருடைய வலீ அஹ்துக்கும் (துணைத் தலைவருக்கும்) நீ நேசிக்கின்ற மற்றும் திருப்திப்படுகின்ற காரியங்களைச் செய்வதற்குத் தவ்ஃபீக் செய்வாயாக, அவர்கள் இருவரையும் நன்மையின் பக்கமும் இறைபக்தியின் பக்கமும் வழிநடத்துவாயாக.

மேலும், இந்த நாட்டை அமைதியானதாகவும், பாதுகாப்பானதாகவும், வளம் கொழிப்பதாகவும், தாராளமான வாழ்வாதாரம் கொண்டதாகவும் ஆக்குவாயாக; அவ்வாறே ஏனைய முஸ்லிம்களின் நாடுகளையும் ஆக்குவாயாக.

**ஜும்ஆ தொழுகைக்கான மாதிரி உரை தயாரிப்புக் குழு.**